RNI No : TNTAM/2023/86867
www.deltamalar.com
95667 16060

# டெல்டா மலர்

## DELTA MALAR


| | | | | | |
|---|---|---|---|---|---|
| மலர் - 4 | இதழ் - 90 | 23-31 டிசம்பர் 2025 | பக்கம் - 8 | விலை ரூ.5 | தஞ்சாவூர் |
| VOL - 4 | ISSUE - 90 | 23-31 DECEMBER 2025 | PAGE - 8 | PRICE ரூ.5 | THANJAVUR |






2028 ஆம் ஆண்டு நடைபெற உள்ள மகாமக விழாவிற்கு நிதி வழங்க கோரி மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் அவர்களை கும்பகோணம் சிட்டி யூனியன் வங்கி நிர்வாக இயக்குனர் காமகோடி சந்தித்து கோரிக்கை விடுத்தார்.

## தஞ்சாவூர் மாநகராட்சிக்கு ரூ. 25,000 அபராதம்: தமிழக தகவல் ஆணையம்!

தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழ், மனுதாரருக்கு உரிய நேரத்தில் தகவல் வழங்காத காரணத்தால் தஞ்சாவூர் மாநகராட்சிக்கு ரூ. 25,000 அபராதம் விதித்து தமிழ்நாடு தகவல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

தஞ்சாவூரைச் சேர்ந்த ரெ.சொர்ணசாரதி, தஞ்சாவூர் மாநகராட்சி மருதையாப்பிள்ளைத் தெருவில் குடிநீர் குழாய் மீது வீடுகட்டி ஆக்கிரமித்துள்ள தொடர்பாக மாநகராட்சியிடம் மனு அளித்துள்ளார்.

இந்நிலையில், அவர் அந்த மனு மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை தொடர்பான கோப்பின் நகல்களை தனக்கு தகவல்களாக வழங்க கோரி தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழ் மனு தாக்கல் செய்துள்ளார். அந்த மனுவுக்கு தகவல்கள் வழங்கப்படவில்லை என்பதால், 2 முறை மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்துள்ளார்.

அந்த மனு, மாநில தகவல் ஆணையர் வி.பி.ஆர் .இளம்பரிதி முன்னிலையில் அண்மையில் விசாரணைக்கு வந்தது. வழக்கை விசாரித்த அவர், தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையர் க.கண்ணன் அடுத்த ஆண்டு ஜன.5-ஆம் தேதி நேரில் ஆஜராகி மனுதாரர் கோரிய தகவல்களை ஆணையத்திடம் சமர்ப்பிக்க வேண்டும்.

அதேபோல், தகவல்களை உரிய நேரத்தில் வழங்காத காரணத்தால் தஞ்சாவூர் மாநகராட்சிக்கு ரூ.25,000 அபராதம் விதித்தும் உத்தரவிட்டுள்ளார்.

மேலும், அந்த இழப்பீடு தொகையை மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான ரசீது நகலை ஆணையத்தில் நேரில் ஆஜராகி சமர்ப்பிக்க வேண்டும் என்றும் உத்தரவிட்டார்.

விசாரணைக்கு நேரில் ஆஜராகாத தஞ்சாவூர் மாநகராட்சி கண்காணிப்பாளர் எஸ் .யோகாம்பாளுக்கு ஏன் ரூ.25,000 அபராதம் விதிக்கக் கூடாது என்பதற்கான விளக்கத்தை வரும் ஜன.5-ஆம் தேதி ஆணையத்தில் நேரில் ஆஜராகி விளக்கம் அளிக்க வேண்டும் என்றும் ஆணையர் வி.பி.ஆர். இளம்பரிதி உத்தரவிட்டுள்ளார்.

### திருப்பரங்குன்றம் தீபத்தூணில் தீபம் ஏற்ற உயிர் தியாகம் செய்த

## பூர்ணசந்திரன் உருவப்படத்திற்கு பாஜக அஞ்சலி

கும்பகோணம்:

திருப்பரங்குன்றம் தீபத்தூணில் தீபம் ஏற்ற வேண்டும் என்பதற்காக உயிர் தியாகம் செய்த பூர்ண சந்திரன் உருவப் படத்திற்கு பாஜக தஞ்சை வடக்கு மாவட்டம், பாபநாசம் கிழக்கு ஒன்றிய தலைவர் செந்தில்குமார் தலைமையில் பட்டீஸ்வரத்தில் ஏராளமான நிர்வாகிகள் மலர் தூவி மௌன அஞ்சலி செலுத்தினர்.





இந்நிகழ்வில் மாவட்ட செயலாளர் ஜெகன்நாத், ஒன்றிய பொதுச்செயலாளர் திருமலை செந்தில், அயலக தமிழர் பிரிவு மாவட்ட செயலாளர் செல்வராஜ், மாவட்ட செயற்குழு உறுப்பினர் கார்த்திகேயன், ஒன்றிய துணைத் தலைவர் தெய்வீகம், பட்டியல் அணி மாநில செயலாளர் பழனிசாமி, அரசு தொடர்பு பிரிவு மாவட்ட துணைத் தலைவர் முகிலன், ஊடகப்பிரிவு மாவட்ட துணைத் தலைவர் சரவணன் மற்றும் மாவட்ட செயலாளர் சுரேஷ்குமார், இந்து முன்னனி குடந்தை ஒன்றிய செயலாளர் சாரல் சதீஷ்குமார் உள்ளிட்ட ஏராளமான நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### மோட்ச தீபம் ஏற்ற அனுமதி மறுப்பு

## பாஜகவினர் சாலை மறியல்! 12 பேர் கைது!

மோட்ச தீபம் ஏற்ற அனுமதி மறுக்கப்பட்டதால், பாஜகவினர் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதையடுத்து 12 பேரை போலீஸார் கைது செய்தனர்.

திருப்பரங்குன்றம் விவகாரத்தால் தீக்குளித்து உயிரிழந்த பூரணச்சந்திரனுக்கு தஞ்சாவூரில் சனிக்கிழமை மாலை மோட்ச தீபம் ஏற்ற அனுமதி மறுக்கப்பட்டதால், பாஜகவினர் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதையடுத்து 12 பேரை போலீஸார் கைது செய்தனர்.

திருப்பரங்குன்றம் உச்சியில் தீபம் ஏற்ற அனுமதி மறுக்கப்பட்டதால், மதுரையில் பூரணச்சந்திரன் என்ற இளைஞர் அண்மையில் தீக்குளித்து உயிரிழந்தார். இதற்காக தஞ்சாவூர் ரயிலடியில் மோட்ச தீபம் ஏற்றுவதற்காக பாஜக தெற்கு மாவட்டத் தலைவர் பி. ஜெய்சதீஷ், தஞ்சாவூர் தொகுதி சட்டப்பேரவை துணை அமைப்பாளர் யு.என். உமாபதி உள்பட பலர் சென்றனர்.

இதற்கு காவல் துறையினர் அனுமதி மறுத்ததால், அதிருப்தியடைந்த பாஜகவினர் திடீரென சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால், அப்பகுதியில் சுமார் 10 நிமிஷங்கள் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. இது தொடர்பாக 12 பேரை காவல் துறையினர் கைது செய்தனர்.

## தஞ்சாவூர் - விழுப்புரம் இரட்டை ரயில் பாதை பணியை தொடங்கக் கோரிக்கை!

தஞ்சாவூர் - விழுப்புரம் இடையே இரட்டை ரயில் பாதை பணியை விரைவில் தொடங்க வேண்டும் என கும்பகோணம் மகாமகம் பாரம்பரிய அறக்கட்டளை நிர்வாகிகள் மத்திய அமைச்சர்களிடம் வியாழக்கிழமை மனு அளித்தனர்.

தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் மகாமகம் பாரம்பரிய அறக்கட்டளைத் தலைவர் காமகோடி தலைமையில் அதன் நிர்வாகிகள் மத்திய அமைச்சர்கள் நிர்மலா சீதாராமன், அஸ்வினி வைஷ்ணவ், கஜேந்திர சிங் ஷெகாவத் ஆகியோரை புதுதில்லியில் வியாழக்கிழமை நேரில் சந்தித்து கொடுத்த கோரிக்கை மனுவில் கூறியிருப்பதாவது :

உலகப் புகழ்பெற்ற கும்பகோணம் மகாமக விழா 2028-ஆம் ஆண்டு நடைபெற உள்ளது. இந்த விழாவுக்கு தமிழகம் மட்டுமின்றி இந்தியா முழுவதும் மற்றும் வெளிநாடுகளில் இருந்து லட்சக்கணக்கான பக்தர்கள் மகாமக குளத்துக்கு புனித நீராட வருவார்கள். இதனால் கும்பகோணம் பகுதிக்கு போக்குவரத்து அடிப்படை உள்ளிட்ட வசதிகள் அமைக்க வேண்டும்.

குறிப்பாக தஞ்சாவூர்-விழுப்புரம் இடையே ரயில்வே இரட்டை வழிப்பாதை பணியை தொடங்கி விரைவில் முடிக்க வேண்டும். கும்பகோணம் மாநகராட்சி பகுதியில் அடிப்படை வசதிகளை மேம்படுத்த தேவையான நிதியை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளனர்.

அப்போது, அறக்கட்டளையின் செயலர் பாலசுப்ரமணியன், துணைத் தலைவர்கள் பாலாஜி, வேலப்பன், நிர்வாக செயலர் கார்த்திகேயன், சீனிவாசன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

### பட்டுக்கோட்டையில்

## பள்ளி மாணவர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகள்

### எம்.எல்.ஏ., கா. அண்ணாதுரை வழங்கினார்

பட்டுக்கோட்டையில் அரசு உதவி பெறும் புனித தாமஸ் மேல்நிலைப்பள்ளியில் மாணவர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் விழா சனிக்கிழமை நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு மறைமாவட்ட அதிபர் அந்தோனிசாமி தலைமை வகித்தார். பள்ளி தாளாளர் ஸ்டீபன் ராஜ், நகர்மன்றத் தலைவர் சண்முகப்பிரியா செந்தில்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். பட்டுக்கோட்டை சட்டப்பேரவை உறுப்பினர் கா. அண்ணாதுரை பங்கேற்று 165 மாணவர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகளை வழங்கினார்.

நிகழ்ச்சியில் தலைமை ஆசிரியர் க . காமராஜ், உதவி தலைமை ஆசிரியர் பி.ஜே. வின்சென்ட் பால் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# பக்தி மலர்

## சபரிமலை ஐயப்பன் கோவில் 18 படிகளுக்கு மேல் எழுதப்பட்டுள்ள **"தத்துவமசி"** என்ற மகா வாக்கியம்

ஐயப்பன் கோவிலில் 18 படிகளுக்கு மேல், தத்துவமசி என்ற மகா வாக்கியம் எழுதப்பட்டுள்ளது. இதை தத்-துவம்-அஸி என பிரித்து படிக்க வேண்டும். " நீ எதை தேடி வந்தாயோ அது உன்னிடமே உள்ளது" என்பது தான் இதன் பொருள். ஐயப்பன் என்ற சொல்லுக்கு நான் உனக்குள் இருக்கிறேன் என்பது தான் பொருள். அனைத்து ஆன்மாவோடு கலந்துள்ள இறைவனை உணர்ந்து, இறை நிலைக்கு மனிதன் உயர வேண்டும் என்ற மகா தத்துவத்தை உணர்த்துவது தான் ஐயப்ப விரத மற்றும் வழிபாட்டின் முக்கிய அம்சமாகும்.

கேரள மாநிலத்தில் மேற்கு தொடர்ச்சி மலை தொகுப்புகளில் அமைந்துள்ள சபரிமலை ஐயப்பன் கோவில் கிட்டதட்ட 468 மீட்டர், (1535 அடி) உயரத்தில் உள்ளது. மூலவர் ஐயப்ப சுவாமியின் சிலை புராதன காலத்தில் ஒன்பது விதமான பாஷானங்களை கொண்டு உருவாக்கப்பட்ட நவ பாஷான சிலையாயிருந்தது எனவும் மரகதக்கல் கொண்டு செய்யப்பட்ட சிலை எனவும் இரு வேறு கருத்துகள் உள்ளன.

தங்கம், வெள்ளி, வெண்கலம் போன்ற உலோகங்களால் செய்யப்பட்ட கவசத்தால் மூடப்பட்ட 18 படிகளிலும் 18 தேவதைகள் அருள் செய்கின்றன. இந்த 18 படிகளும் வாழ்க்கை மற்றும் 18 வகையான குணங்களை குறிப்பதாகவும், இவற்றில் தீயவற்றை நீக்கி, நல்லவற்றை சேர வேண்டும் என்பதே 18 படிகளின் தத்துவம். 18 படிகளில் ஏறும் போது, 18 படிகளை கடந்த ஐயப்பனை தரிசிக்கும் போதும் என்ன வேண்டிக் கொள்கிறோமோ அது அப்படியே நடக்கும் என்பது பக்தர்களின் நம்பிக்கை. 18 படிகள் உணர்த்தும் தத்துவம்.



| | |
|---|---|
| முதல் படி | பிறப்பு நிலையற்றது |
| இரண்டாம் படி | சாங்கிய யோகம் |
| மூன்றாம் படி | கர்ம யோகம் |
| நான்காம் படி | ஞான யோகம் |
| ஐந்தாம் படி | சன்னியாசி யோகம் |
| ஆறாம் படி | தியான யோகம் |
| ஏழாம் படி | ஞான விஞ்ஞான யோகம் |
| எட்டாம் படி | அட்சர பிரம்ம யோகம் |
| ஒன்பதாம் படி | ராஜவித்யா ராஜகுஹ்ய யோகம் |
| பத்தாம் படி | விபூதி யோகம் |
| பதினொன்றாம் படி | விஸ்வரூப தரிசன யோகம் |
| பன்னிரெண்டாம் படி | பக்தி யோகம் |
| பதிமூன்றாம் படி | சேஷத்ர விபாக யோகம் |
| பதினான்காம் படி | குணத்ரய விபாக யோகம் |
| பதினைந்தாம் படி | புருஷோத்தம யோகம் |
| பதினாறாம் படி | தைவாசுரஸம்பத் விபாக யோகம் |
| பதினேழாம் படி | ச்ராத்தாதரய விபாக போகும் |
| பதினெட்டாம் படி | மோட்ச சன்னியாச யோகம் |

ஐயப்ப பக்தர்கள் ஒரு மண்டல கால விரத முறைகளை நெறியாகவும் முறையாகவும் கடைப்பிடித்து ஒவ்வொரு படிகள் மீது ஏற ஏற அவர்கள் தன் வாழ்வில் உயர்ந்து கொண்டே இருப்பார்கள்.

### கும்பகோணம் பேருந்து நிலையம் இடம் மாற்றம்

# அதிமுகவின் கண்டன ஆர்ப்பாட்டம்

### மக்களின் நலனுக்கா... ரியல் எஸ்டேட் தொழில் வளர்ச்சிக்கா

தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் கருப்புகோயில் அருகே புதிய பேருந்துநிலையம் கட்ட முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து காந்தி பூங்கா அருகே அதிமுக சார்பில் சனிக்கிழமை கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இதில், முன்னாள் அமைச்சர் ஆர் .காமராஜ் கலந்து கொண்டு பேசுகையில், கும்பகோணம் மைய பகுதியில் உள்ள பேருந்து நிலையத்தை மாற்றி சாக்கோட்டை அருகில் புதிய பேருந்து நிலையம் அமைக்க விடமாட்டோம். அதற்கான வழக்கு நடைபெற்று வருகிறது என்றார்.

மேலும் அதிமுக நிர்வாகிகள் பேசுகையில்: கும்பகோணம் திமுக எம் .எல்.ஏ அன்பழகனுக்கு சொந்தமான விலைமதிப்பற்ற பல ஏக்கர் நஞ்சை நிலங்கள் கும்பகோணம் அருகே புறநகர் பகுதி கிருஷ்ணாபுரம் அருகில் அமைந்துள்ளன. தற்போது கும்பகோணம் மையப் பகுதியில் உள்ள பேருந்து நிலையத்தை அங்கே கொண்டு செல்வதன் மூலம், அந்தப் பகுதியில் நிலத்தின் விலை பல மடங்கு உயரும் என்பதும், அங்கு வீட்டு மனைகள் (Lay-outs) அமைத்து லாபம் ஈட்டுவதே ஆளுங்கட்சி எம் ,எல்,ஏ அன்பழகனுக்கு உண்மையான நோக்கம் என்பதும் அதிமுகவின் பிரதான குற்றச்சாட்டாக உள்ளது. மேலும் பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலத்தில் நஞ்சை நிலங்களை அழித்து, மக்கள் நலனை விட தனிநபர் லாபத்திற்கு முன்னுரிமை அளிப்பது வஞ்சகச் செயல்!" எனவும் விவசாயிகளுக்கு துரோகம் விளைவிக்கும் செயலாக இருப்பதாகவும், கும்பகோணம் மாநகராட்சியில் தற்போதைய பேருந்து நிலையத்திலேயே போதுமான இட வசதி உள்ள நிலையில் திமுக அமைச்சர், சட்டமன்ற உறுப்பினர் மற்றும் திமுக நிர்வாகிகளின் உறவினர்களுக்கு சொந்தமான நிலங்களின் மதிப்பு உயர வேண்டும் என்ற சுயநலத்துடன் அவர்களது நிலங்களுக்கு அருகிலுள்ள விவசாய நிலங்களில் புதிய புறநகர் பேருந்து நிலையம் அமைக்க துடிக்கும் கும்பகோணம் மாநகராட்சி நிர்வாகத்தை கண்டித்தும் அடிப்படை வசதிகளை மேம்படுத்த வலியுறுத்தியும், கும்பகோணம் மாநகராட்சி நிர்வாகம் மற்றும் திமுக ஸ்டாலின் மாடல் அரசையும் கண்டிப்பத்தாக ஆர்ப்பாட்டத்தில் அதிமுகவினரின் முழக்கங்கள் செய்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட செயலாளர் ஆர் .கே.பாரதி மோகன், முன்னாள் எம் .எல் .ஏ. ராம.ராமநாதன், கொள்கை பரப்பு துணைச்செயலாளர் பி.எஸ்.சேகர், ஜெயலலிதா பேரவை இணைச் செயலாளர் ஏ.வி.கே. அசோக்குமார், ஒன்றிய செயலர்கள் சோழபுரம் க.அறிவழகன், அழகு த.சின்னையன், பகுதி செயலாளர்கள் பத்ம குமரேசன் உள்ளிட்ட ஏராளமான அதிமுக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.






## மகாகவி பாரதி பிறந்த நாள் விழா கவியரங்கம் நூல் வெளியீட்டு விழா

மகாகவி பாரதி பிறந்த நாளையொட்டி, திருவையாறில் 144 கவிஞர்கள் பங்கேற்ற கவியரங்கம், நூல் வெளியீட்டு விழா ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

பாரதி இயக்க அறக்கட்டளை, மதுரை பொற்கை பாண்டியன் கவிதா மண்டலம் சார்பில் நடைபெற்ற இந்த விழாவுக்கு பாரதி இலக்கியப் பயிலக இயக்குநர் கோ. விஜயராமலிங்கம் தலைமை வகித்தார். விழாவில் முண்டாசு கவிக்கோர் முத்துமாலை என்கிற கவிதை நூலை தஞ்சாவூர் தொகுதி மக்களவை உறுப்பினர் ச. முரசொலி வெளியிட்டு சிறப்புரையாற்றினார்.

திருவையாறுஐயாறப்பர்நாட்டியாஞ்சலி அறக்கட்டளையின் பொதுச் செயலர் இரா. குணசேகரன், தியாகபிரும்ம மகா சபா துணைச் செயலர் டி.கே. ரவிச்சந்திரன், திருவையாறு தமிழிசை மன்றத் தலைவர் வீர. செல்வராஜ், தமிழ்ப் பேரவைத் தலைவர் அரங்க. முருகராஜ், பாரதி இயக்க அறங்காவலர் அரங்க. அருள், திருவையாறு பொன்னி அறக்கட்டளை நிர்வாக அறங்காவலர் வழக்குரைஞர் வெங்கடேசன் ஆகியோர் கவிதை நூலை பெற்றுக் கொண்டு வாழ்த்துரையாற்றினர்.

தொடர்ந்து பாரதி 144 பாவலர் 144 என்ற கவியரங்கம் நடைபெற்றது. கவியரங்கிற்கு பொற்கைப் பாண்டியன் கவிதா மண்டலத் தலைவர் பொற்கை பாண்டியன் தலைமை வகித்தார். தமிழகம் முழுவதிலும் இருந்து வந்த 144 கவிஞர்கள் பாரதி வரிகளை தலைப்பாகக் கொண்டு கவிதை பாடினர். காலை முதல் மாலை வரை 7 மணி நேரம் இடைவெளி இல்லாமல் கவியரங்கம் நடைபெற்றது. கவியரங்கினை கவிஞர் ஈஸ்வர ராஜா ஒருங்கிணைத்து நடத்தினார்.

இதைத் தொடர்ந்து போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

பாரதி திறன் வளர் மைய இயக்குநர் குப்பு. வீரமணி தலைமையில் ஐயாறப்பர் நாட்டியாஞ்சலி பொதுச் செயலர் இரா. குணசேகரன் பரிசுகள் வழங்கி சிறப்புரையாற்றினார். திருவையாறு ரோட்டரி சமுதாயக் குழுமத் தலைவர் சாமிநாதன் வாழ்த்துரையாற்றினார். பாரதி இயக்கத் தலைவர் தி.ச. சந்திரசேகர் வரவேற்றார். செயலர் செல்வகுமார் நன்றி கூறினார்.

## தஞ்சை மாவட்டத்தில் 3 வட்டாட்சியர்கள் பணியிட மாற்றம்

தஞ்சாவூர் மாவட்டத்தில் 3 வட்டாட்சியர்கள் வெள்ளிக்கிழமை பணியிட மாற்றம் செய்யப்பட்டனர்.

இது தொடர்பாக மாவட்ட ஆட்சியர் பா. பிரியங்கா பங்கஜம் வெள்ளிக்கிழமை பிறப்பித்துள்ள உத்தரவில், கும்பகோணம் தனி வட்டாட்சியர் (சமூகப் பாதுகாப்பு திட்டம்) வி. பூங்கொடி கும்பகோணம் வட்டாட்சியராக மாற்றப்பட்டுள்ளார்.

கும்பகோணம் வட்டாட்சியர் சி. சண்முகம் கும்பகோணம் தனி வட்டாட்சியராகவும் (சமூகப் பாதுகாப்பு திட்டம்), தஞ்சாவூர் நகர நிலவரித் திட்டத் தனி வட்டாட்சியர் எஸ். சந்தனவேல் பாபநாசம் வட்டாட்சியராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதேபோல, 26 துணை வட்டாட்சியர்களும் பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

## புதுச்சேரி முன்னாள் எம்.எல்.ஏ., பாஸ்கர் பா.ஜ.,வில் இணைந்தார்




முதலியார்பேட்டை முன்னாள் எம் .எல் .ஏ., பாஸ்கர், தனது ஆதரவாளர்களுடன் பா.ஜ.,வில் நேற்று இணைந்தார்.

புதுச்சேரி நூறடி சாலையில் உள்ள சுகன்யா கன்வென்ஷன் சென்டரில் முன்னாள் எம் .எல் .ஏ., பாஸ்கர் பா.ஜ.,வில் இணையும் விழா, நேற்று நடந்தது. மாநில தலைவர் ராமலிங்கம் தலைமை தாங்கினார்.

பா.ஜ., புதுச்சேரி மாநில பொறுப்பாளர் நிர்மல்குமார் சுரானா, அமைச்சர் நமச்சிவாயம், சபாநாயகர் செல்வம், செல்வகணபதி எம்.பி., ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சிறப்பு அழைப்பாளராக, மத்திய தொழிலாளர் வேலைவாய்ப்பு மற்றும் இளைஞர் நலன் விளையாட்டுத்துறை அமைச்சர் மன்சுக் மாண்டவியா பங்கேற்று பேசினார்.


தொடர்ந்து, முதலியார்பேட்டை தொகுதி முன்னாள் எம் .எல் .ஏ., பாஸ்கர் தனது ஆதரவாளர்களுடன் பா.ஜ.,வில் இணைந்தார்.

விழாவில், மாநில பொறுப்பாளர் நிர்மல்குமார் சுரானா பேசுகையில், 'புதுச்சேரியில், கடந்த தேர்தலில், 6 எம் .எல் .ஏ.,க்களுடன் வெற்றிப்பெற்றுள்ளோம்.

வரும் சட்டசபை தேர்தலில், பா.ஜ., சார்பில் 13 எம்.எல்.ஏ.,க்களுடன் வெற்றிபெறுவோம். கட்சியில் இணைந்துள்ள முன்னாள் எம் .எல் .ஏ., பாஸ்கரை தேர்தலில் நிறுத்தி, 13வது எம் .எல்.ஏ.,வாக வெற்றிபெற வைப்போம்' என்றார்.




# திருவையாறு தொகுதி






## •R.திருச்செந்தில் M.B.A M.S(I.T).

டெல்டா மண்டல இளைஞரணி தலைவர்

தந்தை: R.ராதா தாயார்: R.புவனேஸ்வரி
பூர்வீகம் : ஏரி கிராமம்.

மே 23, 1980, திருவையாறு சட்டமன்ற தொகுதி, களிமேடு கிராமத்தில் பிறந்தார். முன்னோர்கள் பாரம்பரிய காங்கிரஸ் குடும்பத்தினர் ஆவர்.

உயர்நிலை பள்ளிப்படிப்பை தஞ்சையிலும், மேல்நிலைப்பள்ளி படிப்பை சென்னையிலும் பயின்றார். 2002 ஆம் ஆண்டு பூண்டி புஷ்பம் கல்லூரியில் எம்.பி.ஏ (நிதி மற்றும் கணினி) பட்டம் பெற்றார்.

வெளிநாடுகளில், பல்வேறு துறைகளில் குறிப்பாக கப்பல்துறையில் மிக உயரிய பொறுப்புகளில் பணியாற்றிய அனுபவம் பெற்றவர்.

**அரசியல் அனுபவம்:** 2009 ம் ஆண்டு தனது அரசியல் பயணத்தை தொடங்கினார்.

அன்றைய மத்திய அமைச்சரும், தமிழ் மாநில காங்கிரஸ் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான திரு.G.K.வாசன் அவர்கள் மீது ஏற்பட்ட பற்றின் காரணமாக காங்கிரஸில் தன்னை இணைத்துக் கொண்டார். இளைஞர் காங்கிரஸ் உறுப்பினர் சேர்க்கையில் தஞ்சையிலே அதிக உறுப்பினர்களை சேர்த்து சட்டமன்றத் தொகுதி இளைஞர் காங்கிரஸ் தேர்தலிலே வெற்றி பெற்றார்.

தமிழ் மாநில காங்கிரஸ் மாநில செயற்குழு உறுப்பினர் திரு S.சுரேஷ் மூப்பனார் அவர்களால் அடையாளப்படுத்தப்பட்டு, மறைந்த தஞ்சை மண்டலத்தின் அரசியல் முன்னோடி திரு.G.R.மூப்பனார் அவர்களால் 2012 ஆம் ஆண்டு நடைபெற்ற இளைஞர் காங்கிரஸ் தேர்தலில், தஞ்சை பாராளுமன்றத் தொகுதி தலைவராக அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றவர்.

**பணிகள்:** ● தஞ்சையிலிருந்து புறப்படும் உழவன் எக்ஸ்பிரஸ் ரயிலுக்காக முதல் கோரிக்கை அன்றைய மத்திய அமைச்சர் திரு.G.K வாசன் அவர்களிடம் இளைஞரணி சார்பில் கோரிக்கை வைத்தது.

- மதுவிலக்கை அமல்படுத்த கோரி சுமார் மாபெரும் கையெழுத்து இயக்கம் நடத்தி 85758 கையெழுத்துக்கள் பெற்று அரசின் கவனத்திற்கு கொண்டு வந்தது.
- காவிரி மேலாண்மை வாரியம் அமைத்திடவும், கர்நாடக அரசு காவிரி ஆற்றின் குறுக்கே மேகதாது அணை கட்டுவதை கண்டித்து தலைவர் G.K வாசன் அவர்களுடன் தஞ்சையில் ரயில் மறியல் போராட்டம் நிகழ்வில் திரளான இளைஞர்களுடன் கைது.
- AIIMS மருத்துவமனையை திருவையாறு தொகுதி செங்கிப்பட்டி யில் அமைத்திட வேண்டி இளைஞரணி சார்பில் தஞ்சையில் மாபெரும் ஆர்ப்பாட்டம்.
- கொரானா காலத்தில் மக்கள் பணியில் இளைஞர்களுடன் முகாம்கள் நடத்தியது.
- டாஸ்மாக் கடைகளை அகற்றிட கோரி இளைஞரணி சார்பில் பல்வேறு போராட்டங்கள்.
- தமிழ் மாநில காங்கிரஸில், 10 ஆண்டு காலம், தஞ்சை தெற்கு மாவட்ட இளைஞரணி தலைவராகவும், 2024 முதல் தஞ்சை, திருச்சி, புதுக்கோட்டை, அரியலூர், பெரம்பலூர், திருவாரூர், நாகை, மயிலாடுதுறை ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய டெல்டா மண்டல இளைஞரணி தலைவராக உள்ளார்.
- 2021 முதல் 2023 வரை, மத்திய தொலைதொடர்பு துறையின் ஆலோசனைகுழு உறுப்பினராக பணியாற்றினார்.

# வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் மது விற்று பணம் சம்பாதிக்கிறது திமுக அரசு

## சவுமியா அன்புமணி குற்றச்சாட்டு

திமுக அரசு தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் அதிகளவில் மதுபானங்களை விற்று பணம் சம்பாதித்து வருகிறது என பசுமைத்தாயகம் தலைவர் சவுமியா அன்புமணி குற்றம் சாட்டியுள்ளார்.

'சிங்கப் பெண்ணே எழுந்து வா' என்ற முழக்கத்தோடு தமிழக மகளிர் உரிமை மீட்புப் பயணம் என்ற பெயரில் பசுமைத் தாயகம் அமைப்பின் தலைவர் சவுமியா அன்புமணி தமிழகம் முழுவதும் சுற்றுப்பயணம் மேற்கொண்டு வருகிறார்.

இன்று திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி அருகே ஆர்.கே.பேட்டையில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்ற தமிழக மகளிர் உரிமை மீட்புப் பயண நிகழ்வில் சௌமியா அன்புமணி பேசியதாவது: ஆந்திர எல்லையையொட்டியுள்ள மாவட்டமான திருவள்ளூர் மாவட்டத்தில் அதிகளவில் கஞ்சா புழக்கத்தில் உள்ளது.

இளைஞர்களிடையே உள்ள போதை பழக்கத்தால் பொதட்டூர்பேட்டையில் இன்சூரன்ஸ் பணத்துக்காக இரு மகன்கள் தந்தையை பாம்பு கடிக்கச்செய்து கொன்றுள்ளனர். கும்மிடிப்பூண்டி அருகே ஆரம்பாக்கத்தில் சிறுமி பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டுள்ளார்.

தாங்கள் ஆட்சிக்கு வந்தால், நெசவாளர்கள், விவசாயிகள் அதிகம் வசிக்கும் திருத்தணி பகுதியில், நெசவு பூங்கா அமைக்கப்படும், நறுமணப் பொருட்கள் தயாரிக்கும் ஆலை அமைக்கப்படும் என, திமுக வாக்குறுதி அளித்தது.



அந்த வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் மதுபானங்களை அதிகளவில் விற்று பணம் சம்பாதித்து வருகிறது திமுக அரசு.

திருத்தணி அரசு மருத்துவமனை மாவட்ட தலைமை மருத்துவமனையாக பெயரளவில் தரம் உயர்த்தப்பட்டுள்ளதால் மருத்துவர்கள் பற்றாக்குறை உள்ளது. ஆனால், மக்கள் கேட்காமலேயே 108 ஆம்புலன்ஸ் திட்டம் உள்ளிட்ட திட்டங்களை கொண்டு வந்தவர் அன்புமணி. ஆகவே, அன்புமணியை தேர்தலில் வெற்றி பெற செய்தால் நிறைய வளர்ச்சி திட்டங்களை செயல்படுத்துவார்.

பெண்கள் உள்ளாட்சி நிர்வாக பதவிகளுக்கு அதிக அளவில் போட்டியிட்டு வெற்றி பெற்று தங்கள் பகுதிக்கு தேவையான அடிப்படை வசதிகள் செய்து கொள்ள வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

# அரசியல் மேடை

## தமிழ் மாநில காங்கிரசுடன் இணைந்தது காமராஜர் மக்கள் கட்சி

தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியுடன் காமராஜர் மக்கள் கட்சியை இணைக்கும் விழா ஈரோடு வில்லரசம் பட்டியில் உள்ள திருமண மண்டபத்தில் நடைபெற்றது. தமாகா தலைவர் ஜி.கே வாசன் எம்.பி. தலைமை வகித்தார். மாவட்ட தலைவர் சண்முகம், மாநில செயற்குழு உறுப்பினர் சந்திரசேகர் ஆகியோர் முன்னிலை வகித்தனர். தமாகா மாநில பொதுச்செயலாளர் யுவராஜா, துணைத் தலைவர் விடியல் சேகர், மத்திய மாவட்ட தலைவர் விஜயகுமார் ஆகியோர் வரவேற்று பேசினர்.





தொடர்ந்து காமராஜர் மக்கள் கட்சி தலைவர் தமிழருவி மணியன் தலைமையில் அந்த கட்சியை சேர்ந்தவர்கள் ஜி.கே.வாசன் முன்னிலையில் தமாகாவில் தங்களை இணைத்து கொண்டனர். அப்போது தமிழருவி மணியன் உள்ளிட்டோருக்கு மாலை மற்றும் பொன்னாடை அணிவித்து வரவேற்பு தெரிவிக்கப்பட்டது.

அப்போது தமாகா தலைவர் ஜி.கே.வாசன் பேசுகையில்: தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியுடன் காமராஜர் மக்கள் கட்சி இணையும் விழா உணர்வுப்பூர்வமான விழா. தமிழருவி மணியன் தலைமை தாங்கி நடத்தி வந்த காமராஜர் மக்கள் கட்சியை தமாகாவுடன் இணைப்பது யானை பலமாக இருக்கும். தமிழகத்தில் உள்ள நல்லவர்கள், மரியாதை உள்ளவர்கள் நம்மோடு சேரும் காலம். அதற்கு அடித்தளமாக தமிழருவி மணியன் இருக்கிறார். அவரது இயக்கத்தின் தொண்டர்கள், பொறுப்பாளர்களை இரு கரம் கூப்பி வரவேற்கிறேன். நன்றி தெரிவித்து கொள்கிறேன்.

முத்துடன் மாணிக்கம் சேர்வது போல தமாகாவுடன் காமராஜர் மக்கள் கட்சி இணைவது தங்கத்துடன் வைரம் சேர்வது போல இருக்கிறது. மகாத்மா காந்தி, காமராஜர், மூப்பனார் ஆகிய மூன்று பேரும் முன்னோடிகள், வழிகாட்டிகள். இந்த இணைப்பு லட்சியத்திற்கு, கொள்கைக்கான இணைப்பு. உலக தமிழர்கள் மற்றும் அரசியல் தலைவர்களால் மதிக்கக்கூடிய தலைவர் தமிழருவி மணியன். காமராஜர், மூப்பனாருடன் நெருங்கி பழகியவர். தமிழருவி மணியன் தனக்கு சரி என்று பட்டதை மட்டும் பேசும் துணிச்சல் மிக்க தலைவர். பொது வாழ்க்கையில் லாபம் நஷ்டம் பார்க்காமல் செயல்பட்ட தலைவர். இதனால் இழந்தது ஏராளம். இருந்தாலும் நல்ல நண்பர்களை பெற்று இருக்கிறார்.

மக்கள் நலம் சார்ந்து செயல்படக் கூடியவர் தமிழருவி மணியன். அவர் விரும்பி சமரசம் செய்து இருந்தால் எவரும் எட்ட முடியாத உயரம், பதவிகளை பெற்று இருப்பார். எல்லாம் தெரிந்த தமிழருவி மணியனுக்கு சமரசம் தெரியாது. காந்தியடிகளை வணங்குவது காமராஜரின் கொள்கையை பரப்புவது தமிழகத்தின் வளர்ச்சிக்காக பாடுபடுவது தான் தெரியும்.


வளமான தமிழகம், வலிமையான பாரதம் என்று உருவாக்க தமிழருவி மணியன் தன்னை அர்ப்பணித்து கொள்ள வேண்டும். இந்த இணைப்பு விழா தான் எங்கள் இருவரையும் இணைத்து இருக்கிறது என்பது தவறு. பெருந் தலைவர் காமராஜருக்கு பிறகு மூப்பனார் தலைமை ஏற்று செயல்பட்டார். மூப்பனார் மறைவுக்கு பிறகு என்னுடைய வளர்ச்சிக்கு பாடுபட்டார்.

அகில இந்திய அளவில் என்னுடைய வளர்ச்சி உயர்வில் அக்கறையுடன் தமிழருவி மணியன் செயல்பட்டார். தமிழ் மாநில காங்கிரஸ் கட்சி உயர வேண்டும், வளர வேண்டும் என்று உதவியாக இருந்தவர் தமிழருவி மணியன். நான் எடுக்கும் முடிவுகள் தொடர்பாக தமிழருவி மணியனுடன் தொடர்ந்து ஆலோசனை செய்து வந்து இருக்கிறேன். எனக்கு பல நேரங்களில் பல முடிவுகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தி இருக்கிறார்.

தமிழ் மாநில காங்கிரஸ் கட்சி 12 ஆண்டுகளாக மலர் படுக்கையில் பயணிக்கவில்லை என்று தமிழருவி மணியனுக்கு தெரியும். அதிலிருந்து மீட்க வேண்டும் என பிறந்த நாள் பரிசாக அவர் கட்சி இணைப்பை நடத்தி இருக்கிறார். வெற்றி தோல்வி தாண்டியும் மரியாதையுடன் பயணிக்க தமிழ் மாநில காங்கிரஸ் கட்சி ஒரு கூட்டு குடும்பம்.

தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியில் இணைந்த மூத்த தலைவர் தமிழருவிமணியன், துணை நின்ற அனைவருக்கும் வாழ்த்துகளும் பாராட்டுகளும் நன்றியும்.

இவ்வாறு அவர் பேசினார்.







# பாலாலயம் முடிந்து 2 வருடத்தை நெருங்கும் இளந்துறை சுந்தரேஸ்வரர் கோவில்

## திருப்பணிகள் தொடங்காததன் காரணம் என்ன?

### கேள்வி எழுப்பும் பக்தர்கள்

பாலாலயம் செய்து 18 மாதங்கள் நிறைவு பெற்ற நிலையில் இளந் துறை சுந்தரேஸ்வரர் கோவிலில் திருப்பணி தொடங்குமா? என்று பக்தர்கள் எதிர்பார்த்து உள்ளனர்.

**பாலாலயம்**

கும்பகோணம் அருகே உள்ள இளந்துறை கிராமத்தில் அபிராமி அம்பிகா சுந்த ரேஸ்வரர் கோவில் உள்ளது. இந்த கோவிலில் ஆண்டுதோ றும் கார்த்திகை மாதம் கடைசி செவ்வாய் தீர்த்த வாரி பஞ்ச மூர்த்திகள் புறப் பாட்டுடன் சிறப்பாக நடக்கும்.

ஒப்பிலியப்பன் கோவில் நிர்வாகத்தின் கீழ் இயங்கும் இக்கோவிலில் கடந்த 2014-ம் ஆண்டு குடமுழுக்கு நடந்தது. கடந்த ஆண்டு மே மாதம் 3-ந்தேதி விமான பாலாலயம் அதன் பிறகு சாரம் கட்டப் (பூமி பூஜை) நடைபெற்றது. பட்டு ஒரு சில மண்டபங்கள் இடிக்கப்பட்டு சில பணிகள் மட்டும் நடைபெற்ற நிலையில் பணிகள் எதுவும் நடை பெறாமல் அப்படியே கிடப்பில் போடப்பட்டது.

**குடமுழுக்கு**


பாலாலயம் நடைபெற்று 18 மாதங்கள் ஆகியும் வேலை அப்படியே நிலுவையில் உள்ளது

கோவிலுக்குள் பக்தர்கள் உள்ளே செல்ல முடியாத அளவு கற்கள் இடிந்து மேலே விழுவதாக பக்தர்கள் பயத் தில் உள்ளனர்.

இதனால் கடந்த ஆண்டும் இந்த ஆண்டும் என 2 கார்த் திகை கடைசி செவ்வாய் தீர்த்தவாரி நடத்த முடியா மல் கிராம மக்கள் மிகுந்த மனவேதனையில் உள்ளனர்.

பல்வேறு புராண சிறப்பு கள் பெற்ற அபிராமி சுந்த ரேஸ்வரர் கோவிலில் விரை வில் திருப்பணி செய்து குட முழுக்கு நடத்த வேண்டும்.

நடவடிக்கை வில்லை என்றால் கோடுவில் நிர்வாகத்தை கவனிக்கும் ஒப்பிலியப்பன் கோவில் முன்புகிராம மக்கள் அனை வரும் திரண்டு பல்வேறு போராட்டத்தில் ஈடுபட உள்ளோம் என பக்தர்கள் தெரிவித்து உள்ளனர்.










# சினி டாக்



## தமன்னா பிறந்தநாள் பார்ட்டி..

### யாருடன் கொண்டாடி இருக்கிறார் தெரியுமா!



நடிகை தமன்னாவுக்கு இந்திய அளவில் மிகப்பெரிய ரசிகர் கூட்டம் இருக்கிறது. அவர் ஒரு பாடலுக்கு நடனம் ஆடினாலே அந்த பாடல் பெரிய ஹிட் ஆகிறது. இந்நிலையில் தமன்னா அவரது 36வது பிறந்தநாளை கொண்டாடி இருக்கிறார். அதற்கு ரசிகர்கள் வாழ்த்து மழை பொழிந்து வருகின்றனர்.

தமன்னா கேக் வெட்டி அவரது பிறந்தநாளை கொண்டாடி உள்ளார். அவரது அம்மா, மற்றும் நெருக்கமான நண்பர்கள் மட்டுமே அதில் கலந்து கொண்டு இருக்கின்றனர். அந்த வீடியோ தற்போது இணை யத்தில் வைரல் ஆகி இருக்கிறது. நடிகை மிருனாள் தாகூர் உள்ளிட்ட பலர் அந்த பார்ட்டியில் கலந்து கொண்டிருக்கின்றனர்.



## “அல்லு அர்ஜுனை மலையாள நடிகர் என நினைத்துக் கொண்டிருந்தேன்”

### - அனஸ்வரா ராஜன்

மலையாளம், தெலுங்கு, தமிழ் என அனைத்து பக் கங் களிலும் ஆல் ரவுண் டராக வலம் வருகிறார் நடிகை அனஸ்வரா ராஜன்.

அவர் நடித்திருக்கும் ‘சாம்பியன்’ என்ற தெலுங்கு திரைப்படம் கூடிய விரைவில் வெளியாக இருக்கிறது. இதுதான் அனஸ்வரா தெலுங்கில் அறிமுகமாகும் திரைப்படம். அப்படத்திற்கான புரோமோஷன் நேர்காணல் ஒன்றில் அல்லு அர்ஜுனை மலையாள நடிகர் என்று நினைத்ததாகக் கூறியிருக்கிறார். அந்தத் தகவல் தற்போது இணையத்தில் வைரலாகப் பரவி வருகிறது.

அனஸ் வரா ராஜன் பேசுகையில், “நான் அல்லு அர்ஜுன் சாரை மலையாள நடிகர்களில் ஒரு வர் என்று நினைத்துக் கொண்டிருந்தேன். குழந்தைப் பருவத்தில் கேரளாவில் அவரது திரைப் படங்கள் பிரபலமாக இருந்ததால், அவரது படங்கள் மலையாள மொழி என்றே நினைத்து வந்தேன். ஒருபோதும் அது மற்ற மொழி படங்கள் என யோசித்ததில்லை. அல்லு அர்ஜுன் சார் நடித்த படங்கள் மட்டுமல்ல, நீண்ட காலமாக தெலுங்கு படங்களை மலையாள டப் செய்யப்பட்ட வெர் ஷன்களில் பார்த்து வந்தேன்” எனக் கூறியிருக்கிறார்.

தமிழில், ‘டூரிஸ்ட் ஃபேமிலி’ அபிஷேக் ஜீவித் உடன் இவர் இணைந்து நடித்திருக்கும் திரைப் படமும் ரிலீஸுக்கு ரெடியாகி வருகிறது.

## இயக்குனர்கள் அனைவரும் அதை தான் கேட்கிறார்கள்..

### நடிகை டாப்ஸி சொன்ன ஷாக்கிங் விஷயம்



ஆடுகளம் படம் மூலமாக தமிழில் அறிமுகம் ஆனவர் டாப்ஸி பண்ணு. அவர் அதற்கு பிறகு வந்தான் வென்றான், ஆரம்பம், காஞ்சனா 2 போன்ற பல படங்களில் நடித்தார். தற்போது தமிழில் நடிப்பதை குறைத்துவிட்டு ஹிந்தி சினிமாவில் மட்டுமே கவனம் செலுத்தி வருகிறார். அவருக்கு கடந்த வருடம் மதியாஸ் போ என்ற பாட்மிண்டன் வீரர் உடன் திருமணம் நடந்து முடிந்தது.

சமீபத்தில் டாப்ஸி அளித்த பேட்டியில் தான் நடிக்க வந்த புதிதில் சுருள் முடி காரணமாக பல்வேறு சிக்கல்களை சந்தித்ததாக கூறி இருக்கிறார். முடி நேராக இருந்தால் தான் கிளாமராக இருக்கும் என எல்லா இயக்குனர்களும் நம்புகிறார்கள். அதனால் என்னுடைய முடியை straight ஆக்க வேண்டும் என அடிக்கடி கேட்பார்கள்.

சுருள் முடி எப்போதும் கலகம் ஏற்படுத்தும் ஒரு ரோலுக்கு தான் செட் ஆகும், நல்ல பெண் ரோலுக்கு அது செட் ஆகாது என சொல்வார்கள். எனக்கு எதுவும் தெரியாது என்பதால் இயக்குனர் சொல்வதை ஏற்று முடியை straight–en ஆக்கிவிடுவேன். படங்கள் மட்டுமின்றி வி ள ம் ப ர த் தி ல் நடிக்கும் போது கூட அதை தான் சொல்வார்கள்.

## ‘லவ் டுடே’ பட பாணியில் அதிரடி ஹிட்...

### பிரதீப் ரங்கநாதன் ரெடி!



டியூட்’ படத்தை அடுத்து மீண்டும் அதிரடி ஹிட்டுக்கு ரெடியாகிவிட்டார் பிரதீப் ரங்கநாதன். தன்னுடைய ‘லவ் டுடே’ பட பாணியில் இந்தப் படத்திலும் நடிப்போடு, டைரக் ஷனையும் கவனிக்கத் திட்டமிட்டுள்ளார்.

## புது சீரியலில் நடிக்கும் சிறகடிக்க ஆசை கோமதி பிரியா!

### வெளியான ப்ரோமோ

விஜய் டிவியின் சிறகடிக்க ஆசை சீரியலில் ஹீரோயின் மீனா ரோலில் நடித்து வருபவர் கோமதி பிரியா. அந்த சீரியலுக்கு நல்ல வரவேற்பு கிடைத்து வரும் நிலையில், டிஆர்பி–யில் அந்த சேனலில் முதலிடத்தில் சிறகடிக்க ஆசை தான் இருந்து வருகிறது.

இந்நிலையில் தற்போது நடிகை கோமதி பிரியா விஜய் டிவியின் மகாநதி சீரியலின் ரீமேக்கில் தான் அவர் நடித்து இருக்கிறார். அதன் ப்ரோமோ தற்போது வெளியாகி வைரலாகி இருக்கிறது.

